02 JUN 2008
Eastern University, Sri Lanka.

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## Part I Examination in Business Administration / Commerce (External)

## 2001 / 2002 (Repeat)

## BBA / COM 202 Advanced Financial Accounting - I

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது. நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

1. 31.12.2007 இல் உள்ளவாறான X கம்பனியினதும் Y கம்பனியினதும் ஐந்தொகைகள் பின்வருமாறு

| | X கம்பனி | Y கம்பனி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 210000 | 150000 |
| இலாப நட்டக் கணக்கு | 120000 | 75000 |
| கடன்கொடுத்தோர் | 120000 | 125000 |
| | **450000** | **350000** |
| காணி கட்டடம் | 130000 | 100000 |
| தளபாடமும் பொருத்திகளும் | 100000 | 70000 |
| இருப்புக்கள் | 40000 | 50000 |
| கடன்பட்டோர் | 110000 | 90000 |
| காசும் வங்கியும் | 70000 | 40000 |
| | **450000** | **350000** |

1.1.2008 இல் X கம்பனியானது Y கம்பனியை பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஈர்ப்பு செய்தது.

1. Y கம்பனியின் சாதாரண பங்குதாரருக்கு பங்கு ஒன்றிக்கு X கம்பனியின் ஒவ்வொன்றும் ரூபா. 10 வான ஒரு சாதாரண பங்கினை பங்கு ஒன்று ரூபா. 15/- விலையில் வழங்குதல்

2. Y கம்பனியின் சொத்துக்களும் ( காசு மற்றும் வங்கி மீதியைத் தவிர) பொறுப்புக்களும் பின்வரும் பெறுமதியில் X கம்பனியால் கையேற்கப்படுதல்.

| | ரூபா |
|---|---|
| காணி கட்டடம் | 120000 |
| தளபாடம் பொருத்திகள் | 60000 |
| இருப்புக்கள் | 45000 |
| கடன்பட்டோர் | 85000 |
| கடன்கொடுத்தோர் | 118000 |

3. கலைப்புச் செலவு ரூ.10000 Y கம்பனியால் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது.**

i. Y கம்பனியின் கணக்கேடுகளை மூடுவதற்கான பொருத்தமான பேரேட்டு கணக்குகளைத் தயாரிக்குக.

ii. X கம்பனியின் ஏடுகளில் Y கம்பனியின் கொள்வனவு தொடர்பான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக.

**(35 புள்ளிகள்)**

2. கொழும்பு தலைமை அலுவலகத்தினதும் இந்தியாவில் அமைந்துள்ள அதன் கிளையினதும் கணக்கேடுகளிலிருந்து 31.12.2007 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதிகள் பின்வருமாறு :

Eastern University, Sri Lanka 02 JUN 20..

| விடயங்கள் | தலைமை அலுவலகம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூ.000) | செலவு (ரூ.000) | வரவு (இந்தியரூ.000) | செலவு (இந்தியரூ.000) |
| மூலதனம் | | 2900 | | |
| இலாப நட்டக் கணக்கு 1.1.2007 இல் | | 800 | | |
| நிலையான சொத்துக்கள் | 2500 | | 2000 | |
| 1.1.2007 இல் இருப்பு | 100 | | 80 | |
| கொள்வனவுகள் | 4500 | | 600 | |
| தலைமை அலுவலகத்திலிருந்து பெற்ற பொருட்கள் | | | 1200 | |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | | 3000 | | |
| விற்பனைகள் | | 5000 | | 2600 |
| வியாபார செலவுகள் | 500 | | 300 | |
| தலைமை அலுவலக நடைமுறைக் கணக்கு | | | | 1700 |
| கிளை நடைமுறைக் கணக்கு | 3500 | | | |
| கடன் பட்டோர் | 600 | | 300 | |
| கடன் கொடுத்தோர் | | 300 | | 200 |
| காசும் வங்கியும் | 300 | | 20 | |
| | **12000** | **12000** | **4500** | **4500** |

மேலதிக தகவல்கள்:

1. 31.12.2007ல் இருப்புக்கள்: தலைமை அலுவலகம் - ரூபா. 150000
   கிளை - இந்திய ரூபா.100000

2. நாணய மாற்று விகிதங்கள் பின்வருமாறு :

   i. நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டபோது : ஒர் இந்திய ரூபா = ரூபா. 1.50
   ii. 1.1.2007 இல்: ஒர் இந்திய ரூபா = ரூபா. 2.00
   iii. 31.12.2007 இல்: ஒர் இந்திய ரூபா = ரூபா . 3.00
   iv. ஆண்டுக்கான சராசரி விகிதம் : ஒர் இந்திய ரூபா = ரூபா. 2.50

வேண்டப்படுவது :

1. கிளையின் பரீட்சை மீதியை இலங்கை ரூபா நாணய அலகிற்கு மாற்றுக.

2. கிளைக்கான பின்வரும் கணக்குகளை தயாரிக்குக.

   i. 31.12.2007 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு.
   ii. 31.12.2007 இல் உள்ளவாறான ஐந்தொகை.

(35 புள்ளிகள்)

3. A கம்பனியினதும் அதன் உப கம்பனியாகிய B கம்பனியினதும் 31.12.2007 இல் உள்ளவாறான ஐந்தொகைகள் பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | A கம்பனி | B கம்பனி |
|---|---|---|
| பங்கு மூலதனம்(பங்கு ஒன்று ரூ.10) | 1000000 | 400000 |
| இலாப நட்டக் கணக்கு | 150000 | 60000 |
| கடன் கொடுத்தோர் | 150000 | 40000 |
| | **1300000** | **500000** |
| **சொத்துக்கள்** | | |
| நிலையான சொத்துக்கள் | 400000 | 200000 |
| B கம்பனியின் பங்குகளின் முதலீடு | 400000 | -------- |
| இருப்புக்கள் | 200000 | 200000 |
| கடன்பட்டோர் | 200000 | 20000 |
| வங்கி மீதி | 100000 | 80000 |
| | **1300000** | **500000** |

மேலதிக தகவல்கள் :

i. 31.12.2007 இல் A கம்பனியானது B கம்பனியின் 30000 சாதாரண பங்குகளை கொள்வனவு செய்தது.

ii. B கம்பனியின் கடன்பட்டோர் A கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 5000 வை உள்ளடக்கியுள்ளது.

LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

வேண்டப்படுவது :

31.12.2007 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

(30 புள்ளிகள்)